11.06.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண். 43/2021

அ.சா.18

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பூங்குழலி | | |
| க /பெ | ராமகிருஷ்ணன் | | |
| கிராமம் | பாண்டிச்சேரி | தொழில் | |
| தாலுக்கா | பாண்டிச்சேரி | வயது | 47 /2025 |
| மாவட்டம் | பாண்டிச்சேரி | தேதி | 11.06.2025. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் பாக்கம் கிராமம் தெற்கு பகுதி கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் விழுப்புரம் மாவட்டம் ஆழியூர் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது திரு. மூர்த்தி என்பவர் என் உதவியாளராக பணியலிருந்தார். நாங்கள் இருவரும் பணியிலிருந்த போது 13/04/2019 ந் தேதி காலை சுமார் 6 மணியளவில் பள்ளியநேயனூர் இயில்வே பாதை அருகில் உள்ள பூராசாமி உடையார் நிலத்திற்கு அருகில் ராஜ்கிரண் த/பெ ராதாகிருஷ்ணன் பள்ளிப்புதுப்பட்டு காலனி விழுப்புரம் மாவட்டம் என்பவர் சந்தேகப்படும் படியாக இறந்து கிடந்தவரின் பிரேதத்தை கைப்பற்றி கண்டமங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் கடந்த 02/05/2019ந் தேதி மதியம் சுமார் 12 மணியளவில்

எதிரிகள் 1. தீபக் என்கிற தீபக்ராஜ் த/பெ பாபு , டாக்டர் அம்பேத்கர் தெரு , வளவனூர் விழுப்புரம் மாவட்டம், 2. சசி என்கிற கஸ்தூரி, க/பெ ராஜ்கிரண், பள்ளிப்புதுப்பட்டு விழுப்புரம் மாவட்டம் என்பவர்கள் மேற்படி வழக்கு சம்மந்தமாக போலீசார் தங்களை தேடுவதாகவும், போலீசார் தங்களை கைது செய்தால் தங்களை அடிப்பார்கள் என்று பயந்தும், தன்னிடம் தானாக சரணடைந்தவரை சாட்சிகள் 1. மூர்த்தி த/பெ கண்ணதாசன், கிராம உதவியாளர் ஆழியூர் கிராமம், 2. வேல்முருகன் த/பெ கோதண்டபாணி என்பவர்கள் முன்னிலையில் என்னிடம் சரணடைந்தவர்களும் அனைத்தும் உங்களுக்கு எதிராக அமையும் என்று சொல்லியும், அவர்களின் தீபக்ராஜ் என்பவர் சொல்லிக்கொண்ட விவரங்களை 12. 15 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலமாக நான் பதிவு செய்தேன். பிறகு அதில் எதிரி தீபக் ராஜ், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ. 4 ஆகும். பிறகு எதிரிகள் மற்றும் நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலங்களுடன் கண்டமங்லகம் காவல் நிலையம் சென்று ஆய்வாளர் வசம் நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், எதிரிகளையும் ஒப்புவித்தேன். ஆய்வாளர் அவர்கள் மேற்படி இரண்டு எதிரிகளையும் கைது செய்தும், என் உதவியாளர் திரு. மூர்த்தி மற்றும் என் முன்னிலையில் எதிரி தீபக் ராஜ் மற்றும் சசி என்கிற கஸ்தூரி ஆகியோர்களை விசாரித்தார்கள். பிறகு அவர்கள் இருவரும் எந்த துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்தக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்தார். அவைகளில் எங்களிடமும் , எதிரிகளிடமும் தனித்தனியே கையொப்பம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் தீபக்ராஜ் , தானும், சசி என்கிற கஸ்தூரியும் மற்ற

எதிரிகளும் தீட்டிய சதிதிட்டம் குறித்து ராஜ்கிரணை கொலை செய்த விவரத்தினையும் பிறகு ராஜ்கிரணின் பிரேதத்தை அவரது இருசக்கர வாகனத்தில் கொண்டு வந்து பள்ளியநேயனூர் இரயில்வே பாதையில் போட்ட விவரத்தினையும் பிறகு அவரை கொலை செய்ய பயன்படுத்திய கோடாரியும் , அவரது பிரேதத்தை கடத்தி வர பயன்படுத்திய அவரது மோட்டார் சைக்கிளையும் பூராசாமி உடையார் நிலத்தில் போட்ட விவரத்தினையும் அதில் சொல்லியுள்ளார். பிறகு தன்னை அழைத்து சென்றால் அந்த கோடாரி, மோட்டார் சைக்கிளையும் போட்டுள்ள இடத்தினை காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். என்னிடம் காட்டப்படும் தீபக் ராஜ் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1ம் கையெழுத்து என்னுடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 5 ஆகும்.

2 ம் எதிரி சசி என்கிற கஸ்தூரியும் மேற்படி தீபக் என்கிற தீபக் ராஜ் த/பெ பாபு என்பவர் சொன்ன மாதிரியே அனைத்து விவரங்களையும் சொன்னார். அவைகளையும் ஒப்புதல் வாக்குமூலமாக ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தார்கள். அதிலும் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரியிடமும் கையொப்பம் பெறப்பட்டது. சசி என்கிற கஸ்தூரி யும் தன்னை அழைத்து சென்றால் மேற்படி இடத்தையும் , கொலைக்கு பயன்படுத்திய பதிவு எண். PY01AB 1622 Honda Unicon மோட்டார் சைக்கிளையும் ஆஜர் செய்ததாகவும், தீபக் ராஜ் சொன்ன மாதிரியே சொன்னார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆகும். பிறகு 4 . 30 மணியளவில் பள்ளியநேயனூர் இரயில்வே தண்டவாளம் அருகில் உள்ள பூராசாமி கரும்பு தோட்டத்திற்கு எதிரிகள் சகிதம் எங்களையும் அழைத்து கொண்டு ஆய்வாளர் அவர்கள் சென்று அங்கு எங்கள்

முன்னிலையில் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த 1. இரும்பு கோடாரி ஒன்று , 2. பதிவு எண். PY01AB 1622 Honda Unicon என்ற சில்வர் கலர் இருசக்கர வாகனம் ( இன்ஜின் ஜேசிஸ் நெம்பர் அழிக்கப்பட்டது) ஆகியவைகளை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசர் ஒன்று தயார் செய்து அதில் அவைகளை கைப்பற்றிக்கொண்டார்கள். அதில் நானும், என் உதவியாளர் திரு. மூர்த்தி அவர்களும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 7 ஆகும். மேற்படி கோடாரி மற்றும் மோட்டார் சைக்கிளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் PY01AB 1622 Honda Unicon என்ற இருசக்கர வாகனத்தின் போட்டோக்கள் எண்ணிக்கை (4) அ.சா.ஆ. 8 ஆகும்.

**கோடாரியை குறியீடு செய்ய விசாரணையானது பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**